2026 மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 – லட்சுமணன் |
| தகப்பனார் பெயர்: | முத்துக்கருப்பத்தேவர் |
| ஊர்: | வாலாந்தூர் |
| வட்டம்: | உசிலம்பட்டி |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | கொத்தனார் |
| வயது : | 73 |

13.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, வாலாந்தூரில் வசித்து வருகிறேன். நான் கொத்தனராக வேலை செய்து வருகிறேன். சில வருடங்களுக்கு முன்பு நான் போடிநாயக்கனூர் முந்தலில் உள்ள ஒரு பார்க்கில் காவலராக பணியாற்றினேன். நான் பார்க்கில் வேலை பார்த்த சமயங்களில் ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் 4 வருடங்களுக்கு முன்பு வேலையை விட்டு சென்றுவிட்டேன். வழக்குச் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்குச் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. கடந்த 09.10.2019ம் தேதி இரவு 3.00 மணிக்கு செல்வம் பார்க்கில் காவலராக வேலைப்பார்க்கும்போது, பார்க் முன்னர் சத்தம் கேட்டது, நான் அங்குச் சென்றுப் பார்த்தப்போது, 5 நபர்களும் சேர்ந்து ஒருவரை தலையிலும், உடம்பிலும் கம்பாலும், கையாலும் மாறி மாறி அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், நான் அவர்களிடம் ஏன்பா ஒருவரை இத்தனை நபர்கள் சேர்ந்து அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, இருச்சக்கர வாகனத்தை திருடிவிட்டு வந்துவிட்டான் என்று சொல்லி அவரை திரும்பவும் அடித்தார்கள், என்றும், அவன் செத்துப்போவான் என்று நினைத்து தடுத்தேன், அப்போது பெட்ரோல் பல்க் வைத்திருக்கும் கார்த்திக்கேயன் என்னுடன் வந்து சேர்ந்து அடிக்காதீர்கள் என்று தடுத்தார் என்றும், அடிப்பட்ட நபர் அங்கேயே மயங்கி விழுந்துவிட்டார் என்றும், அவரை இருச்சக்கர வாகனத்தில் கட்டி உட்கார வைத்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும், மருத்துவமனையில் அவர் இறந்துவிட்டதாகவும், இறந்துபோன நபர் பாபு என்றும் தெரிந்து கொண்டேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.13 18:50:05 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.03.2026